S. NO: 86 BATCH: 87 – 2017 Reg. No.:

END OF SEMESTER EXAMINATIONS, APRIL / MAY – 2018

TAMIL - II

SUBJECT CODE: 17U1TM02

MAJOR : B.A. / B.Sc., SEMESTER : II

TIME : 3 HOURS MAX. MARKS: 75

**பகுதி – அ (10 x 1 = 10)** 8

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

1. எக்காலமாகிலும் எந்தன் ஒரு பணத்தை கொடுத்தே நீ தீரவேண்டும் வெங்கடேசா – என்று கூறியவர் யார்?
2. முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த இறைவனின் திருநாமம் என்ன?
3. 'கிறுஸ்துவக் கம்பர்' எனப் புகழப்படுபவர் எவர்?
4. 'புனல் விளையாட்டுப் படலம்' இடம் பெற்றுள்ள நூல் எது?
5. 'காளியண்ணன் பவனி வருதல்' இடம் பெறும் குறவஞ்சி நூல் எது?
6. 'நல்ல புள்ளியம்மன் பள்ளேசல்' எந்த நூற்றாண்டில் இயற்றப்பட்டது?
7. ஆடிக் குடத்தடையும் என்னும் வரியில் இடம் பெற்றுள்ள சிலேடைப் பொருள்கள யாவை?
8. 'இரட்சிணய யாத்திரிகம்' என்பதன் பொருள் யாது?
9. பெரிய புராணத்தில் குறிப்பிடப்படும் அடியவரின் பெயர் என்ன?
10. சேக்கிழாரின் பட்டப் பெயர் என்ன?

**பகுதி – ஆ (5 x 5 = 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

11. (அ) வெங்கடேஸ்வரரின் திருவிளையாடலைப் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

**(அல்லது)**

(ஆ) திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் பொருளை எழுதுக.

12. (அ) மனச்சான்று உறுத்திய பின் யூதாசின் நிலையைக் குறித்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) மழைக்குறி தோன்றுதலும், மழை பொழிதலும் பள்ளு இலக்கியத்தின் வழி விளக்குக.

13. (அ) இளையான்குடி மாறநாயனாரின் பக்திச் சிறப்பை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) புனல் விளையாட்டுப் படலத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளை எழுதுக.

14. (அ) எள் பாம்பு, செருப்பு விக்குமாறு இவற்றிற்கு காளமேகப்புலவர் கூறும் சிலேடை நயத்தை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) சிவபெருமான் நஞ்சுண்டதற்கும், பெருமாள் மண் உண்டதற்கும் காளமேகப்புலவர் கூறும் காரணத்தை விளக்குக.

15. (அ) கோயில் கலை பற்றி எழுதுக.

**(அல்லது)**

(ஆ) 'ஊர்ப்பெயர் காரணம்' குறித்து எழுதுக.



http://www.onlineBU.com
http://www.onlinebu.com

**பகுதி – இ (4 x 10 = 40)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

16\. (அ) மௌனப் பெரும் பேச்சு என்னும் தலைப்பில் தூரன் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

(ஆ) பாரதியின் நகைச்சுவை குறித்து தூரன் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17\. (அ) காட்டு வழிதனிலே என்ற தலைப்பில் தூரன் கூறும் கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

(ஆ) காந்தியடிகளின் தோற்றம் குறித்து தூரனின் எண்ணங்களை எடுத்துரைக்க.

18\. (அ) சிற்றிலக்கியங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

**(அல்லது)**

(ஆ) தமிழ் நாடகங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

19\. (அ) பால்காரர் பாத்திரப் படைப்பினை மூன்றாம்நதி நாவல் வழி விளக்குக.

**(அல்லது)**

(ஆ) லிங்கப்பா பாத்திரப் படைப்பு மூன்றாம்நதி நாவலின் கதைக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்கி வரைக.

*****

http://www.onlineBU.com

http://www.onlinebu.com